# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2020

# முன்னோடி வினாத்தாள்

## மட்டம் III

## 302 – முகாமைக் கணக்கீடும் நிதியியலும் (MAF)

.

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# 302 – முகாமைக் கணக்கீடும் நிதியியலும் (MAF)

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்பதற்கு: 15 நிமிடங்கள்
விடையெழுத: 03 மணித்தியாலங்கள்

**வினாத்தாளின் கட்டமைப்பு:**

- இந்த வினாத்தாள் பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C எனும் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி A, பகுதி B மற்றும் பகுதி C ஆகிய பகுதிகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 20 |
| பகுதி B | 30 |
| பகுதி C | 50 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.

**விடைகள்:**

- சகல விடைகளும் உமக்குத் தரப்படும் விடைப் புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளில் ஏழுதப்படும் விடைகள் புள்ளியிடலுக்காகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடையினை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- எல்லாச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களுள் எழுதலாகாது.

**விடைப் புத்தகங்கள்:**

- ஒவ்வொரு விடைப் புத்தகத்தின் முகப்பு அட்டையிலும் அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சர கணிதம் மற்றும் வகையீட்டு வசதிகள் அற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். திட்டமிடக்கூடிய கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொல் செவ்வைநிரல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது (நோக்கச் சோதனை வினாக்கள் தவிர). பரீட்சார்த்திகள் வினைச்சொல் செவ்வைநிரலில் தரப்பட்டுள்ள பொருள் வரையறைகளின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01***

பாதீட்டுக் கட்டுப்பாடானது, தரப்பட்ட காலப்பகுதி ஒன்றில் முகாமையாளர்கள் எவ்வளவு சிறப்பாக கிரயங்களையும் செயற்பாடுகளையும் கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கு பாதீடுகளை பயன்படுத்துகின்றனர் என்பதைக் குறிக்கின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**(a)** உருளும் பாதீட்டின் (rolling budget) அனுகூலங்கள் மூன்றினை (03) **குறிப்பிடுக.** ***(03 புள்ளிகள்)***

**(b)** பாதீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றின் நான்கு **(04)** நோக்கங்களை **நிரற்படுத்துக.** ***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

***வினா 02***

**ABC Ltd** இன் X மற்றும் Y ஆகிய உற்பத்திப் பொருட்களின் மாறும் கிரயம் மற்றும் விற்பனை விலை என்பன கீழே தரப்பட்டுள்ளன:

| | X (அலகொன்றிற்கு) (ரூபா) | Y (அலகொன்றிற்கு) (ரூபா) |
|---|---|---|
| விற்பனை விலை | 100 | 80 |
| நேர் பொருள்<br>(கி.கிராம் ஒன்றுக்கு ரூபா.10) | 20 | 15 |
| நேர் கூலி | 15 | 20 |
| மாறும் மேந்தலை | 20 | 18 |

கம்பனி அடுத்த மாதத்தில் பொருள் X இல் 350 அலகுகளையும் பொருள் Y யில் 300 அலகுகளையும் உற்பத்திசெய்ய தீர்மானிக்கின்றது. எனினும், மூலப்பொருளின் அளவு மாதத்திற்கு 1,000 கிலோகிராம் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

மாதத்திற்கான உத்தம உற்பத்திக் கலவையை **கணிக்குக.** ***(05 புள்ளிகள்)***

## *வினா 03*

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் வணிகக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட அலோய்** கம்பனியின் 2019 மாரச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது.

| | |
|---|---|
| ஆண்டிற்கான விற்பனை | – ரூபா 8,000,000 |
| மொத்த இலாபம் | - விற்பனைக் கிரயத்தின் 25% |
| ஆண்டிற்கான சராசரி இறுதிப்பொருட் தொக்கு | – ரூபா 560,000 |
| வியாபார வருமதிகள் புரள்வு விகிதம் | –7.5 தடவைகள் |
| வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலம் | – 40 நாட்கள் |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொழிற்படு மூலதன சுற்றுக் காலத்தினை (Working Capital Cycle) **கணிக்குக.** ***(05 புள்ளிகள்)***

## *வினா 04*

நியமக் கிரயமிடலானது (standard costing) பொருட்கள் அல்லது சேவைகளின் கிரயங்களை முன்னரே தீர்மானித்து இறுக்கப்பட்ட உண்மையான கிரயங்களுடன் ஒப்பிடும் ஒரு கிரயமிடல் நுட்பம் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) நியமக் கிரயமிடலின் அனுகூலங்கள் மூன்றினை (03) **குறிப்பிடுக.** ***(03புள்ளிகள்)***

(b) நியமக் கிரயமிடலின் வரையறைகள் இரண்டினை (02) **நிரற்படுத்துக.** ***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

## *பகுதி A இன் முடிவு*

**மூன்று (03) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 30 புள்ளிகள்)

**பகுதி B**

***வினா 05***

ஒரு கம்பனி **EXE** மற்றும் **WYE** எனும் இரண்டு பொருட்களை உற்பத்தி செய்கின்றது. அதன் எதிர்வு கூறப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு:

| | **EXE**<br>**ரூபா (அலகொன்று)** | **WYE**<br>**ரூபா (அலகொன்று)** |
|---|---|---|
| விற்பனை விலை | 100 | 120 |
| நேர் பொருட்கள் | 50 | 68 |
| நேர் கூலி | 25 | 30 |
| மாறும் மேந்தலைகள் | 5 | 6 |

2020 ஆண்டில் கம்பனி EXE இன் 200,000 அலகுகளை உற்பத்திசெய்து விற்பனைசெய்ய எதிர்பார்ப்பதுடன், EXE மற்றும் WYE க்கு இடையில் வழமையான விற்பனை விகிதமான முறையே 4:1 எனும் விகிதத்தில் WYE இனை உற்பத்தி செய்து விற்பனை செய்ய எதிர்பார்க்கின்றது. வருடாந்த மொத்த நிலையான கிரயம் ரூபா 3,000,000.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வருவனவற்றை **கணிக்குக.**

(a) இணைந்த இலாப கனவளவு விகிதம் (Combined Profit Volume Ratio) ***(04 புள்ளிகள்)***

(b) EXE இன் சமப்பாட்டுப் புள்ளி அலகுகளிலும் பெறுமதியிலும் ***(03புள்ளிகள்)***

(c) EXE மற்றும் WYE இன் பாதுகாப்பு எல்லை அலகுகளில் ***(03 அலகுகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***வினா 06***

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்தப்பட்ட கம்பனியான **பீட்டா PLC** யின் மூலதனக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.

(1) **பீட்டா PLC** தற்போது பங்கொன்று ரூபா 60 விலையில் வாங்கி விற்கப்படும் 120 மில்லியன் சாதாரண பங்குகளை கொண்டுள்ளது. ஒரு சில நாட்களுக்கு முன்னர் கம்பனி சாதாரண பங்கொன்றிற்கு ரூபா 7.50 வீதம் பங்கிலாபம் செலுத்தியது. அடுத்த நிதியாண்டிலிருந்து பங்கிலாப வளர்ச்சி வீதம் 4% ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(2) தற்போது பங்கொன்று ரூபா 25 விலையில் வாங்கி விற்கப்படும் 40 மில்லியன் மீட்கப்படமுடியாத முன்னுரிமைப் பங்குகள் வழங்கலில் இருக்கிறது. இந்த முன்னுரிமைப் பங்குகள் மீது பங்கொன்றிற்கு ரூபா 2.75 வீதம் பங்கிலாபம் செலுத்தப்படுகிறது.

(3) கம்பனி தனிச்சமொன்று ரூபா 100 விலையுடைய 10 மில்லியன் மீட்கப்படமுடியாத தனிச்சங்களை வழங்கலில் கொண்டுள்ளது. இவற்றிற்கு ஆண்டிற்கு 10.75% வட்டி செலுத்தப்படுகிறது. தனிச்சமொன்றின் தற்போதைய விற்பனை விலை ரூபா 99.40.

(4) கம்பனியின் வருமான வரி வீதம் 14% ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:** கீழ்வருவனவற்றை **கணிக்குக:**

(a) சாதாரண பங்குகளின் கிரயம் ***(02 புள்ளிகள்)***

(b) மீட்கப்படமுடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் ***(02 புள்ளிகள்)***

(c) மீட்கப்படமுடியாத தனிச்சங்களின் கிரயம் ***(02 புள்ளிகள்)***

(d) மூலதன நிறையேற்றிய சராசரிக் கிரயம் ***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 07*

**வரையறுக்கப்பட்ட அல்பா கம்பனியின்** 2019 டிசெம்பர் மாதத்திற்கான பாதிடப்பட்ட மற்றும் உண்மைப் பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன. கம்பனி ஆரம்ப தொக்குகளையோ அல்லது இறுதித் தொக்குகளையோ பேணுவதில்லை.

| | **பாதிடப்பட்ட** (ரூபா) | **உண்மையான** (ரூபா) |
|---|---:|---:|
| விற்பனை | 2,400,000 | 1,800,000 |
| நேர் பொருட்கள் | 800,000 | 650,000 |
| நேர் கூலி | 500,000 | 320,000 |
| மாறும் மேந்தலை | 300,000 | 230,000 |
| **மொத்தப் பங்களிப்பு** | **800,000** | **600,000** |
| நிலையான கிரயம் | 500,000 | 400,000 |
| **மாதத்திற்கான இலாபம்** | **300,000** | **200,000** |

இந்த மாதத்தின்போது உற்பத்திசெய்து விற்பனை செய்த பாதிடப்பட்ட மற்றும் உண்மையான அலகுகளின் எண்ணிக்கை முறையே 100,000 அலகுகள் மற்றும் 60,000 அலகுகள் ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

(a) மேற்படி தகவல்களின் அடிப்படையில் நெகிழ்வுப் பாதீட்டினை (பாதீட்டு கட்டுப்பாட்டுக் கூற்று) **தயாரிக்குக.** ***(7 புள்ளிகள்)***

(b) ஒரு வியாபார நிறுவனத்தின் காசுப் பற்றாக்குறைக்கான மூன்று (03) தீர்வுகளை **குறிப்பிடுக.** ***(3 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***பகுதி B இன் முடிவு***

**இரண்டு (02) கட்டாய வினாக்கள்**

(மொத்தம் 50 புள்ளிகள்)

**பகுதி C**

***வினா 08***

**(A) (a)** **Gray Ltd** ஆனது அடுத்தடுத்த பல செயன்முறைகள் ஊடாகப் பொருளொன்றைத் தயாரிக்கிறது. 2019 மாதத்திற்கான கீழ்வரும் விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

| | |
|---|---|
| உள்ளிட்ட பொருட்கள் | 1000 கி.கிராம் - கிலோகிராம் ஒன்று ரூபா150 |
| நேர் கூலி | ரூபா 79,475 |
| உற்பத்தி மேந்தலை | ரூபா 49,755 |
| செயன்முறை II க்கு மாற்றப்பட்ட வெளியீடு | 830 கிலோகிராம் |
| சாதாரண இழப்பு | உள்ளீட்டின் 5% உம் ஒடிவு உருப்படிகளும் கிலோகிராம் ஒன்று ரூபா 7.50 விலைப்படி விற்கப்பட முடியும். |

ஆரம்ப புத்துருவாகும் வேலை இருக்கவில்லை. மாத இறுதியில் 50 கிலோகிராம் இறுதிப் புத்துருவாகும் வேலை இருந்ததுடன், அவற்றின் பூர்த்தி மட்டம் வருமாறு:

| | |
|---|---|
| பொருள் | 100 % |
| நேர் கூலி | 70 % |
| உற்பத்தி மேந்தலை | 60 % |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 டிசெம்பர் மாதத்திற்கான சமான அலகுகளின் கூற்றினையும் (statement of equivalent units) நிறையேற்றிய சராசரி அடிப்படையில், கிரயம் மற்றும் மதிப்பீட்டுடன் செயன்முறைக் கணக்கினையும் **தயாரிக்குக.** ***(மொத்தம் 13 புள்ளிகள்)***

**(b)** விரைவாக மாறிவரும் உலகளாவிய வியாபாரச் சூழலுக்கு முகங்கொடுக்கும் பல கம்பனிகள் தமது கிரயமிடல் பணியை டிஜிடல் தொழினுட்பத்திற்கு (digital technology) மாற்றி வருகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

டிஜிடல் கிரயமிடலின் இரண்டு (02) அனுகூலங்களை **நிரற்படுத்துக.** ***(02 புள்ளிகள்)***

**(B)** ஒரு கம்பனி M1 , M2 எனும் இருவகையான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பொருள் ஒன்றை உற்பத்தி செய்கின்றது. அலகொன்றிற்கான நியமக் கிரய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| | ரூபா |
|---|---|
| நேர்பொருள் M1- 8 கி.கிராம் @ ரூபா 20 / கி.கிராம் | 160 |
| நேர்பொருள் M2- 12 கி.கிராம் @ ரூபா 10 / கி.கிராம் | 120 |
| நேர்கூலி - 4 மணித்தியாலம் @ ரூபா 60 / மணித்தியாலம் | 240 |

2019 டிசம்பர் மாதத்திற்கான உண்மையான தகவல்கள் கீழ்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| நேர் பொருள் (M1: 7,500 கி.கிராம்) | 140,400 |
| நேர் பொருள் (M2: 12,000 கி.கிராம்) | 130,000 |
| நேர் கூலி (4,200 மணித்தியாலம்) | 273,000 |

2019 டிசெம்பர் மாதம் உற்பத்திசெய்து விற்பனைசெய்த அலகுகளின் எண்ணிக்கை 1,000.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

கீழ்வரும் முரண்களை **கணிக்குக:**

(a) நேர் பொருள் விலை முரண் (Direct material price variance)

(b) நேர் பொருட் கலவை முரண் (Direct material mix variance)

(c) நேர் பொருள் விளைவு முரண் (Direct material yield variance)

(d) நேர் கூலி வீத முரண் (Direct labour rate variance) ***(10 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

## *வினா 09*

**(A)** **Delta Ltd** கம்பனியானது ஒரு புதிய இயந்திரத்தின் மூலம் ஒரு புதிய உற்பத்திப் பொருளை அறிமுகப்படுத்த எண்ணுகின்றது. அது ஏற்கனவே தொழில்நுட்ப சாத்திய ஆய்வுக்காக ரூபா 250,000 இனை செலவு செய்துள்ளது. புதிய இயந்திரத்தின் கிரயம் ரூபா 4,000,000. அத்துடன், அதன் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். தேவையான மேலதிக தொழிற்படு மூலதனம் ரூபா 400,000 என்பதுடன் அது 5 ஆவது ஆண்டின் இறுதியில் மீளளிக்கப்படும்.

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் புதிய பொருள் பற்றியதாகும்:

1. அடுத்த 5 ஆண்டுகளுக்கான புதிய பொருளின் விற்பனை மற்றும் மாறும் கிரயம் கீழ்வருமாறு:

| ஆண்டு | விற்பனை<br>ரூபா | மாறும் கிரயம்<br>ரூபா |
|---|---|---|
| 1 | 2,200,000 | 600,000 |
| 2 | 2,400,000 | 700,000 |
| 3 | 2,800,000 | 1,000,000 |
| 4 | 3,000,000 | 1,100,000 |
| 5 | 3,500,000 | 1,250,000 |

2. புதிய இயந்திரத்தின் தேய்மானம் உட்பட நிலையான பராமரிப்புக் கிரயம் ஆண்டிற்கு ரூபா 1,400,000.
3. தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் கணிப்பிடப்படும். வரி நோக்கத்திற்காக இயந்திரம்மீது கம்பனி கோரும் மூலதனப்படி (capital allowance) ஆண்டிற்கு 25% ஆகும். வரியானது அதே ஆண்டில் செலுத்தப்படுகிறது எனக் கொள்க.
4. கம்பனி வரி வீதம் 14% ஆகவும் மூலதனக் கிரயம் 15% ஆகவும் உள்ளன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

நிகர இற்றைப் பெறுமதிக் (NPV) கணிப்பீட்டைப் பயன்படுத்தி மேற்படி முதலீட்டின் சாத்தியத் தன்மையை **மதிப்பிடுக.** *(15 புள்ளிகள்)*

**(B)** **Furni Ltd**, கம்பனி தளபாடங்களை உற்பத்திசெய்து விற்பனை செய்கின்றது. அது வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து மேசையொன்று ரூபா 22,500 விலைப்படி தனிப்பயனாக்கப் பட்ட 75 மேசைகளுக்கான கட்டளையினை பெற்றுள்ளது. இந்த மேசைகளை உற்பத்திசெய்ய கீழ்வரும் வளங்கள் தேவைப்படுவதுடன் அவை தொடர்புபட்ட கிரயங்கள் தரப்பட்டுள்ளன.

- **மரம்** – ஒரு மேசைக்கு 8 சதுர மீட்டர் மரம் தேவைப்படும். இந்தக் கட்டளைக்கு தேவையான மரம் இருப்பில் இல்லை. இதன் நடப்புச் சந்தை விலை சதுர மீட்டருக்கு ரூபா 365.
- **சாயம் தீட்டுதல் (Polish)** – ஒவ்வொரு மேசைக்கும் 0.5 லீட்டர் விசேட வகைச் சாயம் தேவைப்படும். கம்பனியில் லீட்டர் ஒன்று ரூபா 1,400 விலைப்படி சில காலங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்த இந்தச் சாயத்தின் 40 லீட்டர்கள் உள்ளன. இச் சாயத்தினை பிற கட்டளைகளுக்கு பாவிப்பதில்லை. அவற்றை இந்தக் கட்டளைக்கு பாவிக்காவிடில் லீட்டர் ஒன்று ரூபா 700 விலைக்கு விற்க முடியும்.
- **ஏனைய பொருட்கள்** – மேசையொன்றிற்கான ஏனைய பொருட் கிரயம் ரூபா 4,500 ஆக எதிர்பார்க்கப்படுவதுடன் அவற்றை சந்தையில் கொள்வனவு செய்ய வேண்டும்.
- **கூலி** – ஒரு மேசைக்கு 18 கூலி மணித்தியாலங்கள் தேவைப்படுவதுடன், கூலிக்கு வழக்கமாக ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 600 செலுத்தப்படும். தற்போது சகல திறன்மிக்க கூலி வேலையாட்களும் வேறு கட்டளைகளுக்குரிய வேலைகளில் ஈடுபட்டுள்ளதுடன், இந்தக் கட்டளைக்கான கூலித் தேவையினை ஈடுசெய்வதற்கு வழக்கமான கூலியின் 1.5 மடங்கு வீதம் செலுத்தி மேலதிக நேர வேலையினை பெறுதல் வேண்டும்.
- **மாறும் மேந்தலை –** மேசையொன்றிற்கான மாறும் மேந்தலைக் கிரயம் ரூபா 2,000.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**Furni Ltd** இந்தக் கட்டளையை ஏற்க வேண்டுமா அல்லது வேண்டாமா என மதிப்பிடுக.
*(உமது விடைக்கு ஆதரவாக கணிப்பீடுகளை காட்டுக.)* *(05 புள்ளிகள்)*

**(C)** கம்பனியொன்று அதன் உற்பத்திப் பொருட்கள் பட்டியலில் புதிய பொருளொன்றை சேர்த்துக் கொள்வதா என்பதுபற்றிக் கவனஞ் செலுத்துகிறது. புதிய பொருளை உற்பத்தி செய்வதானால் அது வெற்றியடைவதற்கான நிகழ்தகவு 60%; தோல்வியடைவதற்கான நிகழ்தகவு 40%. புதிய உற்பத்தி வசதிக்கான ஆரம்பக் கிரயம் ரூபா 400,000. பொருள் வெற்றியடையும் பட்சத்தில், சாத்தியமான சந்தை நிலைமைகளின்கீழ் பொருளின் மதிப்பிடப்பட்ட இலாபமும் அவை தொடர்புபட்ட நிகழ்தகவுகளும் கீழே தரப்பட்டுள்ளன:

| சந்தை நிலைமை | நிகழ்தகவு | இலாபம் (ரூபா) |
|---|---|---|
| சாதகமானது | 0.2 | 500,000 |
| நடுநிலையானது | 0.5 | 600,000 |
| பாதகமானது | 0.3 | 300,000 |

இந்த முன்மொழிவு தோல்வியடையும் பட்சத்தில், கம்பனி புதிய உற்பத்தி வசதிக்கான ஆரம்பக் கிரயத்தில் இருந்து ரூபா 100,000 இனை மாத்திரம் மீளப்பெற முடியும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) தீர்மான மர வரைபடம் (decision tree) ஒன்றினை **வரைக**

(b) கம்பனி எடுக்கவேண்டிய தீர்மானத்தினை **மதிப்பிடுக.** *(05 புள்ளிகள்)*

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

**பகுதி C இன் முடிவு**

# செயல் வினைச்சொல் செவ்வைநிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக்கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | பகுப்பாய்வு செய்தல் (Analyze) | தீர்வினை அல்லது பேறினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | முடிவொன்றை அடையும் நோக்கில் விவாதம் மூலம் விபரமாகப் பரீட்சித்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காகப் ஆய்வு செய்தல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக (Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | தொடர்பாடுக (Communicate) | தகவல்களைப் பங்கிடுதல் அல்லது பகிர்தல் |
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றுதலும் | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | | எடுத்துக்காட்டுடன் விபரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | தயாரிக்குக (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்கள் மூலம் தீர்வு காணல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | வரைபுத்தாளில் வரைக (Graph) | வரைபடங்கள் மூலம் காட்டுதல் |
| | | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile) | வேறொன்றுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தல் | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக (Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret) | விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்துதல் |
| | | ஏற்பிசைவு செய்தல் (Recognize) | அறிவை அல்லது அது சார்ந்த அனுபவத்தைக் கொண்டு செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| அறிவு (1) | விடயங்களை ஞாபகப்படுத்தலும் அடிப்படை எண்ணக்கருக்களும் | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**பாடத்திட்டம் 2020**

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## 302 – முகாமைக் கணக்கீடும் நிதியியலும்

## (MAF)

**கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு**

**நான்கு [04] கட்டாய வினாக்கள்** **பகுதி - A**

[மொத்தம் 20 புள்ளிகள்]

**வினா 01 இற்கான விடை**

| | |
|---|---|
| **அலகு 3** | **- வேறுபட்ட வகைப் பாதீடுகள் மற்றும் பாதீடு எதிர் திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடு.** |
| கற்றற் பேறுகள் | - பாதிடலுக்கான வேறுபட்ட அணுகுமுறைகளை விபரித்தல்<br>- நிறுவனம் ஒன்றின் பாதிடல் மற்றும் பாதீட்டுச் செயன்முறையின் நோக்கங்களை ஆராய்தல் |

**(a)** **உருளும் பாதீட்டின் அனுகூலங்கள்**

- இது பாதீட்டின் நிச்சமற்ற தன்மையை குறைக்கின்றது.
- பாதீட்டினை கிரமமாக மீள்மதிப்பீடு செய்து காலத்திற்கு ஏற்ற பாதீட்டினை தயாரிப்பதற்கு முகாமையாளருக்கு அழுத்தம் கொடுக்கின்றது.
- திட்டமிடலும் கட்டுப்பாடும் மிக யதார்த்தமான தற்கால திட்டத்தின் அடிப்படையிலானது.
- இது கம்பனி ஊழியர்களுக்கிடையில் சிறந்த புரிந்துணர்வு, பொறுப்பு மற்றும் குறிக்கோள்களை ஏற்படுத்துகின்றது.
- உண்மைப் பெறுபேறுகளை பாதீட்டுடன் ஒப்பிடுதல் இலகுவானது.

*(ஏதாவது மூன்று விடயங்களுக்கு – 3 புள்ளிகள்)*

**(b)** **பாதீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையின் நோக்கங்கள்**

- இது திட்டமிடலை கட்டாயப்படுத்துகின்றது
- இது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கின்றது.
- இது நடவடிக்கைகளைத் தொடர்பாடல் செய்கின்றது.
- முகாமையாளர் நன்றாக செயற்பட ஊக்கம் அளிக்கின்றது.
- கட்டுப்பாட்டு முறைமையொன்றினைத் தாபிக்கின்றது.
- செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்கின்றது.
- பாதீட்டுக்கு பொறுப்பானவர்களுக்கு அதிகாரங்களை அளிக்கின்றது.
- முகாமையாளர்கள் தங்கள் நோக்கங்களை அடைவதை உறுதிப்படுத்துகின்றது.

*(ஏதாவது நான்கு விடயங்களுக்கு – 2 புள்ளிகள்)*
*(மொத்தம் – 5 புள்ளிகள்)*

## வினா 02 க்கான விடை

| | |
|---|---|
| **அலகு :** | **முகாமைக் கணக்கீட்டிற்கான அறிமுகம், தொடர்புடைய கிரயம், இடர் மற்றும் நிச்சயமற்ற தன்மையின் கீழான தீர்மானமெடுத்தல்** |
| கற்றற் பேறுகள்: | - குறுங்கால தீர்மானங்களை மதிப்பிடல். |

| | χ | y |
|---|---|---|
| விற்பனை விலை | 100 | 80 |
| மாறும் கிரயம் | (55) | (53) |
| பங்களிப்பு | 45 | 27 |
| அலகொன்றிற்கு நேர் பொருள் | 2 kg | 1.5 kg |
| பங்களிப்பு / கி.கிராம் | 22.5 | 18 |
| தர வரிசை | ① | ② |
| உற்பத்திக் கலவை | | |
| χ = 350 X 2 | | 700 |
| γ = 200 X 1.5 | | 300 |
| | | 1000 |

***(5 புள்ளிகள்)***

## வினா 03 க்கான விடை

| | |
|---|---|
| **அலகு 7** | **- தொழிற்படு மூலதன முகாமை** |
| கற்றற் பேறுகள் | - தொழிற்படு மூலதனச் சுற்றினை கணித்தல். |

விற்பனைக் கிரயம் = 8,000,000/ 1.25 = 6,400,000

தொக்கிருப்புக் காலம் = (சராசரித் தொக்கு / விற்பனைக் கிரயம்) * 365 நாட்கள்.

= (560,000 / 6,400,000) * 365 = 31. 93

= 32 நாட்கள்

வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலம் = 365 / புரள்வு விகிதம்

= 365 / 7.5 = 48.67 நாட்கள்

= 49 நாட்கள்

தொழிற்படு மூலதனச் சுற்று = தொக்கிருப்புக் காலம் + வியாபார வருமதிகள் சேகரிப்புக் காலம் – வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலம்

தொழிற்படு மூலதனச் சுற்று = 32 + 49 – 40 = 41 நாட்கள்

***(5 புள்ளிகள்)***

**வினா 04 க்கான விடை**

| | |
|---|---|
| **அலகு 4** | **- நியமக் கிரயமிடலும் மூலதனக் கிரயமும்** |
| கற்றற் பேறுகள் | - நியமக் கிரயமிடலை பிரயோகித்தல். |

**(a)**

(1) விலை மற்றும் உற்பத்திக் கொள்கையை தயாரிக்க முகாமைக்கு உதவுகின்றது.

(2) இது செயற்பாடுகளின் அளவிடையாக செயற்படுகின்றது.

(3) ஏற்படக்கூடிய விரயம் மற்றும் இழப்புக்களை குறைக்கின்றது.

(4) இது முகாமை நேரத்தின் எழுதுவினைஞர் மற்றும் கணக்கீட்டுக் கிரயத்தை குறைக்க உதவுகின்றது.

(5) ஊழியர்கள் அதிக பொறுப்புடையவர் ஆகின்றனர்.

(6) இது பாதீட்டுக் கட்டுப்பாடு மற்றும் தீர்மானமெடுத்தலில் உதவுகின்றது.

(7) நியமங்கள் தயாரிப்பதன் கருத்து குறிக்கோள்களையும் இலக்குகளையும் நிர்ணயிப்பதாகும்.

***(ஏதாவது 3 விடைகள் - 3 புள்ளிகள்)***

**(b)**

(1) இதனை நடைமுறைப்படுத்துவது மற்றும் நாளதுவரை நியமக் கிரயமிடல் முறைமையை பேணுவது கிரயம் அதிகமானதாக, அதிக காலம் எடுப்பதாக இருக்கும். இதற்குக் காரணம் அதிக தொழில்நுட்ப அறிவு தேவைப்படுதலாகும்.

(2) வினைத்திறனற்ற ஊழியர்களால் இந்த முறைமையைத் தொழிற்படுத்த முடியாது.

(3) சரியான நியமங்களை தயாரிப்பதும், சரியான முரண்களை கண்டறிவதும் கடினமானதாகும்.

(4) அடிக்கடி மாற்றமடையும் தொழிற்துறைகளை பொறுத்தமட்டில், நியமங்களை அடிக்கடி மீளாக்கம் செய்யவேண்டியேற்படும். மீளாக்கம் அதிக செலவுடையதாக இருக்கலாம்.

(5) சிறிய கம்பனிகளுக்கு நியமக் கிரயமிடல் செலவு மிக்கதாகும்.

(6) நியமப்படுத்தாத உற்பத்திப் பொருட்கள் அல்லது வாடிக்கையாளர் தேவைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு தொழிற்றுறைகளில் நியமக் கிரயமிடல் பொருத்தமற்றது.

***(ஏதாவது 2 விடயங்களுக்கு - 2 புள்ளிகள்)***
***(மொத்தம் - 5 புள்ளிகள்)***

| மூன்று [03] கட்டாயமான வினாக்கள் | **பகுதி - B** |
|---|---|
| [மொத்தம் 30 புள்ளிகள்] | |

**வினா 05 இற்கான விடை**

**அலகு 1 முகாமைக் கணக்கீட்டிற்கான அறிமுகம், தொடர்புடைய கிரயம், இடர் மற்றும் நிச்சயமற்ற தன்மையின் கீழான தீர்மானமெடுத்தல்**

கற்றற் பேறுகள் - கிரய கனவளவு இலாப பகுப்பாய்வை பிரயோகித்தல்

- நிறுவன பாதிடல் மற்றும் பாதீட்டுச் செயன்முறையின் நோக்கங்களை ஆராய்தல்.

**(a)**

| **அலகொள்றிற்கு ரூபா** | **EXE** | **WYE** |
|---|---|---|
| விற்பனை விலை | 100 | 120 |
| நேர் பொருட்கள் | 50 | 68 |
| நேர் கூலி | 25 | 30 |
| மாறும் மேந்தலை | 5 | 6 |
| **பங்களிப்பு** | **20** | **16** |

WYE இன் விற்பனை அலகுகள் = 200,000 / 4 * 1 = 50,000 அலகுகள்

<u>இணைந்த PV விகிதம்</u>

இணைந்த PV விகிதம் = இணைந்த பங்களிப்பு / இணைந்த விற்பனைப் பெறுமதி

= [(200,000* 20) + (50,000* 16)] / [(200,000 * 100) + (50,000 * 120)]
= 4000,000 + 800,000 / 20,000,000 + 6,000,000
= 4,800,000 / 26,000,000
= **18.46%**

***(4 புள்ளிகள்)***

**(b) <u>Exe இன் சமப்பாட்டுப் புள்ளி</u>**

சமப்பாட்டு விற்பனைப் பெறுமதி = மொத்த நிலையான கிரயம் / இணைந்த PV விகிதம்
= 3,000,000 / 0.1846
= **ரூபா 16,250,000**

Exe இன் சமப்பாட்டு விற்பனை = 16,250,000 * (20,000,000 / 26,000,000)
= **ரூபா 12,500,000**

Exe இன் சமப்பாட்டுக் கணியம் = 12,500,000 / 100
= **125,000 அலகுகள்**

***(3 புள்ளிகள்)***

**(c) <u>Exe இன் பாதுகாப்பு எல்லை (Margin of safety)</u>**

பாதுகாப்பு எல்லை = 200,000 – 125,000 = 75,000 அலகுகள்

**<u>Wye இன் பாதுகாப்பு எல்லை</u>**

Wye யின் சமப்பாட்டு அலகுகள் = (16,250,000 – 12,500,000) / 120 = 31,250 அலகுகள்
பாதுகாப்பு எல்லை = 50,000 – 31,250 = 18,750 அலகுகள்

***(3 அலகுகள்)***
***(மொத்தம் 10 புள்ளிள்)***

**வினா 06 க்கான விடை**

| |
|---|
| **அலகு 5 - மூலதன மூலங்களும் மூலதனக் கிரயமும்.** |
| கற்றற் பேறுகள் - உரிமையாண்மை, கடன் மற்றும் WACC கிரயங்களை கணித்தல் |

**(a)**

சாதாரண பங்குகளின் கிரயம் $= \frac{do\ (l+g)}{po} + g$

$= \frac{7.5(1+0.04)}{60} + 0.04$

$= 17\%$ ***(2 புள்ளிகள்)***

**(b)** முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் $= \frac{d}{po}$

$= \frac{2.75}{25}$

$= 11.00\%$ ***(2 புள்ளிகள்)***

**(c)**

**மீட்கப்படமுடியாத தனிச்சங்களின் கிரயம்**

| | | | |
|---|---|---|---|
| தனிச்சத்தின் சமப் பெறுமதி | | | 100.00 |
| தனிச்சத்தின் சந்தைப் பெறுமதி | | | 99.40 |
| வட்டி | *100 x 10.75%* | = | 10.75 |
| வரி | | | 14% |
| வரிக்குப் பிந்திய வட்டி | *10.75 x (1 - 14%)* | | 9.25 |

**கடன் கிரயம்** = $\frac{9.25}{99.4} \times 100 = 9.30\%$

***(2 புள்ளிகள்)***

**(d)**

**மூலதன நிறையேற்றிய சராசரிக் கிரயம்**

| | | ரூபா 000’ |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் | *120 மில் பங்குகள் x ரூபா 60* | 7200,000 |
| முன்னுரிமைப் பங்கு மூலதனம் | *40 மில் பங்குகள் x ரூபா 25.00* | 1,000,000 |
| தனிச்சங்களின் பெறுமதி | *10 மில் தனிச்சம் x ரூபா 99.40* | 994,000 |
| மொத்தம் | | **9,194,000** |

| | **நிறை** | **மூலதனக் கிரயம்** | **WACC** |
|---|---|---|---|
| சாதாரண பங்குகள் | 78% | 17% | 13.26 |
| முன்னுரிமைப் பங்குகள் | 11% | 11% | 1.21 |
| தனிச்சங்கள் | 11% | 9.3 | 1.023 |

15.5%

***(4 புள்ளிகள்)***

***(மொத்தம் – 10 புள்ளிகள்)***

**வினா 07 க்கான விடைகள்**

| | |
|---|---|
| **அலகு 1** | **- வேறுபட்ட வகைப் பாதீடுகள் மற்றும் பாதீடு எதிர் திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடு** |
| கற்றற் பேறுகள் | - பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்றினை தயாரித்து, கட்டுப்பாடு மற்றும் நடத்தை சம்பந்தப்பட்ட சிக்கல்களை ஆய்வுசெய்தல்.<br>- காசு மிகை மற்றும் பற்றாக்குறைக்கான தீர்வுகளை கலந்தாய்வு செய்தல் மற்றும் பாதிடலின் பிரதிகூலங்களும். |

**(a)** **பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்று**

| | **நிலையான பாதீடு** | **நெகிழ்வுப் பாதீடு** | **உண்மைப் பெறுபேறு** | **முரண்** |
|---|---|---|---|---|
| **உற்பத்திசெய்து விற்ற அலகுகள்** | **100,000** | **60,000** | **60,000** | |
| | | | | |
| விற்பனை | 2,400,000 | 1,440,000 | 1,800,000 | 360,000 |
| | | | | |
| கழி: நேர் பொருள் | 800,000 | 480,000 | 650,000 | (170,000) |
| நேர் கூலி | 500,000 | 300,000 | 320,000 | (20,000) |
| மாறும் மேந்தலை | 300,000 | 180,000 | 230,000 | (50,000) |
| மொத்தப் பங்களிப்பு | 800,000 | 480,000 | 600,000 | 120,000 |
| நிலையான கிரயம் | 500,000 | 500,000 | 400,000 | 100,000 |
| ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | 300,000 | (20,000) | 200,000 | 220,000 |

***(7 புள்ளிகள்)***

**(b)** (1) வழங்குநர் ஒப்பந்தங்களை மீளவும் கலந்தாய்தல் (Renegotiate)

(2) விரைவாக செலுத்தும் வாடிக்கையாளருக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

(3) செலவுகளை குறைத்தல்

(4) விற்பனையை மேம்படுத்தி கடன்பட்டோரிடமிருந்து வசூலித்தல்.

***(ஏதாவது மூன்று விடயங்கள் – 3 புள்ளிகள்)***

***(மொத்தம் – 10 புள்ளிகள்)***

**இரண்டு [02] கட்டாய வினாக்கள்**

[மொத்தம் 50 புள்ளிகள்]

**பகுதி - C**

**வினா 08 இற்கான விடை**

**அலகு 2 – செயன்முறைக் கிரயமிடலும் டிஜிடல் கிரயமிடலும்**

**அலகு 4 – நியம கிரயமிடலும் முரண் பகுப்பாய்வும்**

கற்றற் பேறுகள்
– செயன்முறைக் கிரயமிடலை மதிப்பிடல்
– செயன்முறைக் கிரயமிடலின் அம்சங்களை நிரற்படுத்துதல்.
– அடிப்படை, கலவை, விளைவு, திட்டமிடல் மற்றும் தொழிற்பாட்டு முரண்களை கணித்து, அவற்றின் முக்கியத்துவத்தினை ஆராய்தல்.
- தொழிற்பாட்டுக் கூற்றினை தயாரித்தல்

**A (a)**

**செயன்முறை I கணக்கு**

| | கி.கிராம் | ரூபா | | கி.கிராம் | ரூபா |
|---|---|---|---|---|---|
| பொருள் | 1,000 | 150,000 | முடிவடைந்த பொருட்கள் | 830 | 245,680 |
| கூலி | - | 79,475 | சாதாரண இழப்பு | 50 | 375 |
| உற்பத்தி மேந்தலை | - | 49,755 | அசாதாரண இழப்பு | 70 | 20,720 |
| | | | இறுதி புத்துருவாகும் வேலை | 50 | 12,455 |
| | **1,000** | **279,230** | | **1,000** | **279,230** |

**சமான அலகுகள், கிரயங்கள் மற்றும் மதிப்பீடுகள் கூற்று**

| | **பொருள்** | **கூலி** | **உற்பத்தி மேந்தலை** | |
|---|---|---|---|---|
| முடிவடைந்த பொருட்கள் | 830 | 830 | 830 | |
| இறுதி புத்துருவாகும் வேலை | 50 | 35 | 30 | |
| அசாதாரண இழப்பு | 70 | 70 | 70 | |
| **சமான அலகுகள்** | **950** | **935** | **930** | |
| | | | | |
| உள்ளீட்டுக் கிரயம் | 150,000 | 79,475 | 49,755 | |
| (-) சாதாரண இழப்பு ஒடிவுப் பெறுமதி | (375) | | | |
| மொத்தக் கிரயம் | 149,625 | 79,475 | 49,755 | |
| அலகொன்றின் கிரயம் | 157.50 | 85 | 53.5 | = 296 |
| | | | | |
| **மதிப்பீடு** | | | | |
| முடிவடைந்த பொருட்கள் | $296 \times 830 =$ | **245.680** | | |
| இறுதிப் புத்துருவாகும் வேலை | 7875 | 2975 | 1605 | **= 12,455** |
| அசாதாரண இழப்பு | $70 \times 296 =$ | **20,720** | | |

***(13 புள்ளிகள்)***

**(b)** (1) கணிப்பீடும் பகுப்பாய்வும் இலகுவானது.

(2) கிரயமிடலுக்கான நுட்பத்தினை பயன்படுத்தி தொழிற்பாட்டுக் கிரயம் குறைக்கப்படும்.

(3) இது மிகவும் துல்லியமானது.

***(ஏதாவது இரு விடயங்களுக்கு - 2 புள்ளிகள்)***

**(B)**

**(a)** நேர்பொருள் விலை முரண் = உண்மைக் கணியம் (நியம விலை – உண்மை விலை)

நேர் பொருள் M1 = 7500 * 20 - 140,400 = 9,600 (F)

நேர் பொருள் M2 = 12,000 * 10 – 130,000 = 10,000 (A)

400 A

**(b)** நேர்பொருள் கலவை முரண் = நியம விலை (நியமக் கலவையில் உண்மையான பாவனை – உண்மைக் கலவையில் உண்மையான பாவனை)

நேர் பொருள் M1 = 20 [(8/20 * 19,500) – 7,500] = 6,000 (F)

நேர் பொருள் M2 = 10 [(12/20 * 19,500) – 12,000] = 3,000 (A)

3,000 F

**(c)** நேர்பொருள் விளைவு (yield) முரண் = நியமவிலை * (நியம பாவனை நியம கலவையில் – உண்மை பாவனை நியமக் கலவையில்)

நேர்பொருள் M1 = 20[(20,000 * 8/20) – (19,500 * 8/20)] = 4,000 (F)

நேர்பொருள் M2 = 10[(20,000 * 12/20) – (19500 * 12/20)] = 3,000 (F)

7,000 F

**(d)** நேர் கூலி வீத முரண் = உண்மைக் கூலி மணித்தியாலம் (நியம வீதம் – உண்மை வீதம்)

= 4,200 (60 – 65) = 21,000 (A)

***(10 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

## வினா 09 இற்கான விடை

**அலகு 1 – முகாமைக் கணக்கீட்டின் அறிமுகம், தீர்மானமெடுத்தலில் தொடர்புடைய கிரயம் மற்றும் இடர் மற்றும் நிச்சயமற்ற நிலைமையின்கீழான தீர்மானங்கள்**
**அலகு 6 – மூலதன முதலீட்டு மதிப்பாய்வு**
கற்றற் பேறுகள் – இடர் மற்றும் நிச்சயமற்ற நிலைகளின்கீழ் தீர்மானமெடுக்கின்ற வேறுபட்ட முறைகளை மதிப்பிடல்

- DCF மற்றும் DCF அல்லாத முறைகளை பயன்படுத்தி முதலீடுகளை மதிப்பிடல்

**(a)**

ரூபா.000’

| ஆண்டு | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்பக் கிரயம் | (4,000) | | | | | |
| தொழிற்படு மூலதனம் | (400) | | | | | 400 |
| விற்பனை | - | 2,200 | 2,400 | 2,800 | 3,000 | 3,500 |
| மாறும் கிரயம் | | (600) | (700) | (1000) | (1,100) | (1,250) |
| பராமரிப்புக் கிரயம் | | (600) | (600) | (600) | (600) | (600) |
| வரிக் கொடுப்பனவு (குறிப்பு 1) | - | - | (14) | (28) | (42) | (231) |
| | (4,400) | 1000 | 1,086 | 1,172 | 1,258 | 1819 |
| DF 15% | 1 | 0.869 | 0.756 | 0.658 | 0.572 | 0.497 |
| இற்றைப் பெறுமதி | (4,400) | 869 | 821 | 771 | 720 | 904 |

**நிகர இற்றைப் பெறுமதி NPV = (315)**

குறிப்பு - 1

| | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| இலாபம் / (நட்டம்) | 200 | 300 | 400 | 500 | 850 |
| தேய்மானம் | 800 | 800 | 800 | 800 | 800 |
| மூலதனப் படி | (1000) | (1000) | (1000) | (1000) | |
| | - | 100 | 200 | 300 | 1,650 |
| வரி 14% | - | 14 | 28 | 42 | 231 |

NPV மறைப் பெறுமதி ஆதலால் நிதிரீதியாக சாத்தியமற்றது. ***(15 புள்ளிகள்)***


**(B)**

| | | **ரூபா.** |
|---|---|---|
| மரம் | *ரூபா 365 / சதுர மீட்டர் x 8 சதுர மீட்டர் x 75 மேசைகள்* | 219,000 |
| சாயம் | *கொள்வனவு விலை – தொடர்பற்றது* | - |
| | *சந்தர்ப்ப கிரயம் - 0.5 லீட்டர் x ரூ 700 / லீட்டர் x 75 மேசை* | 26,250 |
| ஏனைய பொருட்கள் | *ரூபா 4,500 / மேசை x 75 மேசைகள்* | 337,500 |
| கூலி | *18 மணி / மேசை x ரூ 600 / மணி x 1.5 x 75 மேசைகள்* | 1,215,000 |
| மாறும் மேந்தலை | *ரூபா 2,000 / மேசை x 75 மேசைகள்* | 150,000 |
| **மொத்தத் தொடர்புடைய கிரயம்** | | **1,947,750** |
| ஓப்பந்த விலை | *ரூபா 22,500 / மேசை x 75 மேசைகள்* | 1,687,500 |
| நிகர நிதித் தாக்கம் | | **(260,250)** |

**நிகர நிதித் தாக்கம் மறைப் பெறுமதி ஆதலால், கம்பனி கட்டளையை ஏற்கக் கூடாது.**
***(5 புள்ளிகள்)***

(C)

(a)




**(b)** வெற்றியின் எதிர்பார்ப்புப் பெறுமதி = (500,000 * 0.2) + (600,000 * 0.5) + (300,000 * 0.3)

= ரூபா 490,000

தோல்வியின் எதிர்பார்ப்புப் பெறுமதி = ரூபா 100,000

புதிய பொருளை சேர்ப்பதன் எதிர்பார்ப்புப் பெறுமதி = (490,000 * 0.6) + (100,000 * 0.4) – 400,000

= ரூபா (66,000)

புதிய உற்பத்திப்பொருளின் சேர்க்கை ரூபா 66,000 மறையான எதிர்பார்ப்பு பெறுமதியை தருகிறது.

எனவே கம்பனி புதிய பொருளை அறிமுகப்படுத்தக் கூடாது.

***(5 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***